அவர்கள் முன்வருவார்களா; அப்படி வாய்ப்பு இல்லை என்றால் நாமக்கல்லையும், ராசிபுரத்தையும் இணைத்து அங்கே சேலம் மாவட்டத்திற்கு என்று ஒரு தொழிற்சாலை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். சூரியகாந்தி விதைகள் எந்த அளவுக்கு அதிகமான உற்பத்தியைத் தமிழகத்தில் பெறுகிறதோ அந்த அளவுக்கு ஏற்றவாறு தொழிற்சாலைகள் அமைக்க அரசு முன்வரும். அப்படி வருகிறபோது அந்த மாவட்டம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 131, திரு. வி.கே. சின்னசாமி, மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர்.

131—

அரசு நிறுவனங்களுக்கு அரசின் வரிவிதிப்பு முறை

*35146—**திரு வி.கே. சின்னசாமி** :

மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள், பால்வள ஒன்றியங்கள் போன்ற அரசு நிறுவனங்கள் தமிழக அரசின் வரிவிதிப்பு முறையை எதிர்த்து நீதிமன்றங்களுக்குச் சென்று உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த நிகழ்வுகளுக்காக நீதிமன்றங்களுக்குச் சென்று உள்ளன?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பொதுவாகக் கூட்டுறவு நிறுவனங்கள்தாம் வரிவிதிப்புக்கு உட்படவில்லை என்றும் சரக்கு இருப்பினை மாற்றியதற்கு விதிக்கப்பட்டுள்ள வரி, சட்டத்திற்கு மாறானது என்றும் அல்லது அதிகம் என்றும் கோரிக்கைகளை முன்வைத்து வழக்குகள் தொடர்ந்துள்ளன.

முற்பகல் 10–50

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரி விதிப்பை எதிர்த்து நீதிமன்றங்களுக்குச் சென்றுள்ள

1995 மார்ச் 28]

வாரியம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் எவை எவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட வாரியாக அறிவிப்பார்களா என்றும், இதனால் எவ்வளவு வரி வசூல் பாக்கி இதுவரை அரசுக்கு உள்ளது என்பதையும் அறிவிப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக இல்லை என்றாலும், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் தலைவராக இருக்கின்ற தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் வரி விதிப்பை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது. அதை அடுத்து தென் இந்திய கூட்டுறவு நூற்பாலைகள் லிமிடெட் என்ற நிறுவனம், சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம், இந்த அரசின் வரி விதிப்பை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றதில் அரசுக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்கப் பெற்றிருக்கிறது. அதேபோல் ஈரோடு, பெரியார் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம், அரசை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றதில் அரசுக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்கப் பெற்றிருக்கிறது. அதுபோல், சேலம், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனையாளர் சங்கம், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன், தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், பெரியார் மாவட்ட கூட்டுறவு பால் சங்கம், ஈரோடு, மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிமிடெட், மதுரை, கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை லிமிடெட் ஆகியவை நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடர்ந்திருக்கின்றன. இதனால் அரசுக்குச் சேர வேண்டிய வரித் தொகை 24.10 கோடி ரூபாய் வசூலிக்கப்படாத நிலைமையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எழுப்புகிற உறுப்பினர் தனிப்பட்ட முறையில் தனக்கு இருக்கிற இன்டரஸ்டைக் காண்பிப்பதுபோல் கேள்வி கேட்கக் கூடாது என்று விதிகளிலே இருக்கிறது. நீங்கள் ஏற்கெனவே ஒரு நிறுவனத்தின் தலைவராக இருக்கிறீர்கள். அதுவே வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறது என்று அமைச்சர் தெரிவிக்கிறார். அதனால் மேற்கொண்டு இதில் கேள்வி வேண்டாம்.

வினா எண் 132, திரு. ஆர். தங்கராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 133, திரு. ஆர் சிங்காரம், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.